வெளியீடு 14-8-2002

Issued 14-8-2002

514/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 11, 2002 தொகுதி 14 – எண் 1

**Monday the 11th March, 2002– Volume 14 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

விலை ரூ. 3.00]

[Price Rs. 3.00

5/4
2002

## 11-3-2002

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Governor and Council of Ministers | ix - xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii - xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix - xxix |
| **1. இரங்கற் குறிப்புகள்—** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 1 - 4 |
| **2. இரங்கல் தீர்மானங்கள்—** | |
| (அ) ஜம்மு-காஷ்மீர் சட்டமன்றத்தின்மீது 1-10-2001 அன்று மற்றும் இந்திய நாடாளுமன்றத்தின்மீது 13-12-2001 அன்று நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் மற்றும் ஏனைய அலுவலர்கள் மறைவு | 4-5 |
| (ஆ) திரு. ஜி.எம்.சி. பாலயோகி, மக்களவைத் தலைவர் மற்றும் திரு. ம. அப்துல் லத்தீப், திரு. ஆ. செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் மறைவு | 5-34 |
| *மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 5-7 |
| திரு. லா. சந்தானம் | 7-8 |
| *திரு. கே.என். இலட்சுமணன் | 8-9 |
| திரு. ஜி. பழனிசாமி | 10 |

| | பக்கங்கள் |
|---|---|
| 2. இரங்கல் தீர்மானங்கள்—தொடர்ச்சி | |
| *திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 11-12 |
| *திருமதி டி. யசோதா | 12-14 |
| திரு. ஜி.கே. மணி | 14-20 |
| *திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 20-27 |
| *பேராசிரியர் க. அன்பழகன் | 27-31 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 31-33 |


223445



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

**3. நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :**

நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல்.

**4. கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

**5. சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :**

*சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.*

**6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :**

*இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.*

**7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை :**

*மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலன்.*

**8. உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :**

*நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

**9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. தனபால் :**

*கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.*

**10. வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :**

*வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும்அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.*



**11. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :**

*வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.*

**12. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :**

*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.*

**13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :**

*ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.*

**14. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :**

*போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்*

**15. மின்துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :**

*மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.*

**16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :**

*தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரிகள்.*

17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. மோகன் :

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாடு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் :

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர் கிராமத் தொழில் வாரியம்.

19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :

வீட்டுவசதி, வீட்டுவசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :

கால்நடை பராமரிப்பு.

21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.



23. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

24. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் :

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம் செய்தித்தாள் கட்டுப்பாடு.

25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

26. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :

மீன்வளம்.

27. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர் :

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

   *Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare.*

2. **Minister for Public Works and Prohibition and Excise** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

   *Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption and Prisons.*

3. **Minister for Finance and Information Technology** .. **The Hon. Thiru C. Ponnaiyan:**

   *Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on Money lending, Chits and Registration of Companies and Information Technology.*

4. **Minister for Education** .. **The Hon. Dr. M. Thambidurai:**

   *Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.*

5. **Minister for Law** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law and Courts.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

9. **Minister for Co-operation, Food and Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

10. **Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan and Passports.

11. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.



12. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

13. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

14. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. **Minister for Electricity** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity, Non-conventional Energy Development.

16. **Minister for Industries and Commercial Taxes** .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Industries, Iron and Steel Control, Mines and Minerals, Electronics and Commercial Taxes.

17. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests and Environment and Pollution Control.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vilwanathan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

19. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

20. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Animal Husbandry.

21. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K. Sudarsanam:**

Backward Classes, Most Backward Classes and De-notified Communities.

22. **Minister for Labour** .. **The Hon. Thiru Va.Thu. Natarajan:**

Labour, Employment and Training, Urban and Rural Employment Census and Wakfs.

23. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

24. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control.

25. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundram:**

Handlooms and Textiles.

26. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

27. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்**

*மாற்றுத் தலைவர்கள்**

**திரு. பி.ஆர். சுந்தரம்**

**திரு. அ. பாப்பா சுந்தரம்**

**திரு. ப. இராஜரெத்தினம்**

**திரு. எம்.ஏ. ஹக்கீம்**

**திரு. செ.கு. தமிழரசன்**

**திரு. லா. சந்தானம்**

*முதன்மைச் செயலாளர்*

**திரு. செ.சு. ஜானகிராமன்**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

---

*12-3-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ.,பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | |
|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. உவ.து. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ.,பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |



| | |
|---|---|
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ் | .. புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி. வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகுசி. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்

22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்

23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்

24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி

25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்

26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி

27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை

28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி

29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்

30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்

31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்

32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)

34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)

35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)

36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்

37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்

38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்

39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்

40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்

41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆவா.)

42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி

45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்

47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு

48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி

49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)

50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி

51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி

52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)

53. கந்தசாமி, திரு. கு.ரா. .. சத்தியமங்கலம்

54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)

55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்

56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்

57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி

59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)

60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆவா.)

61. கனகதாரா, செல்வி சி. .. போளூர்பட்டு (செ.வ.)

62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)

63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்

64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்

65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்

67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)

68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)

69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்

71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்

72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்

74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி

75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)

76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்

77. சக்ரபாணி, திரு. ஆர் .. ஒட்டன்சத்திரம்

78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்

80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி

81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்

82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை

83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி

84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை

85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)

86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை

87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்

88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)

90. சாமி, திரு. ஆர். .. மேலூர்

91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்

93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)

94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை

95. சிவசாமி, திரு. செ. .. திருப்பூர்

96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்

97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)

99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)

101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்

102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி

103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்

104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

105. சுந்தரம்பாள், திருமதி செ. .. மேட்டூர்

106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)

107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்

108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்

109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்

110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி

111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
131. துரைமுருகன், திரு. .. காட்பாடி
132. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு



134. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். .. நாட்றாம்பள்ளி
136. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
137. நடராஜன், திரு. வது. .. இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
141. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
142. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-I
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
155. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)

| | | |
|---|---|---|
| 157. பாரிமோகன், திரு. கி. | .. | தருமபுரி |
| 158. பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. | கடலாடி |
| 159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | .. | தொண்டாமுத்தூர் |
| 160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. | .. | ஸ்ரீரங்கம் |
| 161. பாலபாரதி, செல்வி க. | .. | திண்டுக்கல் |
| 162. பாலன், திரு. எஸ்.எம். | .. | லால்குடி |
| 163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். | .. | சேரன்மகாதேவி |
| 164. பிச்சாண்டி, திரு. கு. | .. | திருவண்ணாமலை |
| 165. புகழேந்தி, திரு. இ. | .. | கடலூர் |
| 166. பூபதி மாரியப்பன், திருமதி | .. | வலங்கைமான் (செ.வ.) |
| 167. பெருமாள், திரு. என்.கே. | .. | விளாத்திக்குளம் |
| 168. பொன்முடி, டாக்டர் க. | .. | விழுப்புரம் |
| 169. பொன்னம்பலம், திரு. ப. | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 170. பொன்னையன், திரு. சி. | .. | திருச்செங்கோடு |
| 171. போளூர் வரதன், திரு. | .. | செங்கம் (செ.வ.) |
| 172. மகாலிங்கம், திரு. எஸ். | .. | அவினாசி (செ.வ.) |
| 173. மகேந்திரன், திரு. கே. | .. | பெரம்பூர் (செ.வ.) |
| 174. மகேஸ்வரி, திருமதி எஸ். | .. | கோயம்புத்தூர் மேற்கு |
| 175. மணி, திரு. கோ.சி. | .. | கும்பகோணம் |
| 176. மணி, திரு. டி. | .. | விளவங்கோடு |
| 177. மணி, திரு. ஜி.கே. | .. | பெண்ணாகரம் |
| 178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். | .. | சாத்தான்குளம் |



| | | |
|---|---|---|
| 179. மலையப்பசாமி, திரு. அ.இரா. | .. | கபிலர்மலை |
| 180. மல்லிகா, திருமதி சி. | .. | முசிறி |
| 181. மாணிக்கராஜ், திரு. எஸ். | .. | நாங்குநேரி |
| 182. மில்லர், திரு. அ. | .. | கூடலூர் |
| 183. முரளிதரன், திரு. கே.வி. | .. | தளி |
| 184. முருகவேல் ராஜன், திரு. க. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 185. முருகேசன், திரு. ஆகு. | .. | ஆத்தூர் |
| 186. முனுசாமி, திரு. கா.பூ. | .. | காவேரிப்பட்டினம் |
| 187. மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. | பாளையங்கோட்டை |
| 188. மோகன், திரு. ப. | .. | சின்னசேலம் |
| 189. யசோதா, திருமதி டி. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 190. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 191. ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. | பட்டுக்கோட்டை |
| 192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | .. | கோபிசெட்டிப்பாளையம் |
| 193. ராதாகிருஷ்ணன், திரு. எம். | .. | திருமயம் |
| 194. ராமராஜ், திரு. ச. | .. | போடிநாயக்கனூர் |
| 195. ராம்குமார், திரு. எம். | .. | பாபநாசம் |
| 196. ராஜகோபால், திரு. ஆ. | .. | சிவகாசி |
| 197. ராஜம்மாள், திருமதி எஸ். | .. | தூத்துக்குடி |
| 198. ராஜா, திரு. எச். | .. | காரைக்குடி |
| 199. ராஜாங்கம், திரு. வி.ஆர். | .. | சோழவந்தான் |
| 200. ராஜு, திரு. எச்.எம். | .. | உதகமண்டலம் |
| 201. ரெங்கநாதன், திரு. என். | .. | பூம்புகார் |

202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்
203. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
204 ரியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி
205. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்
206. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு
207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
208. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்
209. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
210. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்
211 விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர்
212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை
213. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி
214. வீரபாண்டியன், திரு. ஜெ.க. .. மயிலாடுதுறை
215. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
216. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-I
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
218. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
219. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
220. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி
221. வைத்தியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
222. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு



223. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்
224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி
225. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)
226. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
227. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி
228. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
229. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
230. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி
231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)
233. (வெற்றிடம்) .. சைதாப்பேட்டை
234. (வெற்றிடம்) .. வாணியம்பாடி
235. (வெற்றிடம்) .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**மாசி 27, விசு - திருவள்ளுவர் ஆண்டு-2033**
**2002 மார்ச் 11, திங்கட்கிழமை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

*"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு."*

இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலைப் போன்றது; பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக்கொள்வதைப் போன்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கற் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. என். சிவராஜ் அவர்கள் 6-8-2001 அன்றும், திரு. வ. ஜார்ஜ் அவர்கள் 16-9-2001 அன்றும், திரு. பி. குழந்தை கவுண்டர் அவர்கள் 24-9-2001 அன்றும், திரு. எஸ். கிருஷ்ணன் அவர்கள் 3-10-2001 அன்றும், திரு. சி.டி. தண்டபாணி அவர்கள் 28-10-2001 அன்றும், திரு. சி. பாண்டுரங்கம் அவர்கள் 11-11-2001 அன்றும், தமிழக முன்னாள் அமைச்சரும், பேரவை முன்னாள் உறுப்பினருமான திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் 6-12-2001 அன்றும், பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. என். எஸ். பலராமன் அவர்கள் 20-12-2001 அன்றும், திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் 26-12-2001 அன்றும், தமிழக முன்னாள் அமைச்சரும், பேரவை முன்னாள் உறுப்பினருமான திரு. முகமது ஆசிப் அவர்கள் 12-1-2002

அன்றும், பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. பெ. மொக்கையன் அவர்கள் 25-2-2002 அன்றும், திரு. எல். பலராமன் அவர்கள் 26-2-2002 அன்றும், திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு அவர்கள் 7-3-2002 அன்றும் மறைவுற்றதை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சிவராஜ் அவர்கள் 1952 முதல் 1957 வரை நாகப்பட்டினம் பொதுத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வ. ஜார்ஜ் அவர்கள் 1967 முதல் 1971 வரை பத்மநாபபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. டி. குழந்தை கவுண்டர் அவர்கள் 1957 முதல் 1962 வரை நாமக்கல் பொதுத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். கிருஷ்ணன் அவர்கள் 1937 முதல் 1939 வரை மற்றும் 1947 முதல் 1952 வரை பொள்ளாச்சி பொது ஊரகத் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. சி.டி. தண்டபாணி அவர்கள் 1996 முதல் 2001 வரை கோயம்புத்தூர் மேற்கு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டும், 1967 முதல் 1970 வரை, 1971 முதல் 1977 வரை மற்றும் 1980 முதல் 1984 வரை பாராளுமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டும் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. சி. பாண்டுரங்கம் அவர்கள் 1971 முதல் 1976 வரை செங்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் 1967 முதல் 1978 வரை பாராளுமன்ற உறுப்பினராகவும், 1978 முதல் 1980 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1980 முதல் 1984 வரை பட்டுக்கோட்டை தொகுதியிலிருந்தும், 1991 முதல் 1996 வரை தஞ்சாவூர் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1978-80, 1980-84 மற்றும் 1991-96 ஆகிய



ஆண்டுகளில் தமிழக வருவாய்த் துறை அமைச்சராகவும் திறம்பட பணியாற்றியுள்ளார்.

திரு. என்.எஸ். பலராமன் அவர்கள் 1971 முதல் 1976 வரை அரக்கோணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றியுள்ளார்.

திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் 1957 முதல் 1962 வரை பாராளுமன்ற உறுப்பினராகவும், 1971 முதல் 1976 வரை மதுரை மேற்கு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும் போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

*முற்பகல் 10-05*

திரு. முகமது ஆசிப் அவர்கள் 1991 முதல் 1996 வரை திருவல்லிக்கேணி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1991 முதல் 1992 வரை ஊரகத் தொழில் துறை அமைச்சராகவும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. பெ. மொக்கையன் அவர்கள் 1980 முதல் 1984 வரை ராஜபாளையம் (தனி) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எல். பலராமன் அவர்கள் 1967 முதல் 1971 வரை கணியம்பாடி தொகுதியிலிருந்தும், 1980 முதல் 1984 வரை போளூர் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராக இருமுறையும், 1972 முதல் 1978 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் 1984 முதல் 1989 வரை, 1989 முதல் 1991 வரை மற்றும் 1996 முதல் 1997 வரை பாராளுமன்ற உறுப்பினராகவும் மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு அவர்கள் 1977 முதல் 1980 வரை சிங்காநல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினர்களின் மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2002 மார்ச் 11

மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. இரங்கல் தீர்மானங்கள்

### (அ) ஜம்மு-காஷ்மீர் சட்டமன்றத்தின்மீது 1-10-2001 அன்று மற்றும் இந்திய நாடாளுமன்றத்தின்மீது 13-12-2001 அன்று நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் மற்றும் ஏனைய அலுவலர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1-10-2001* அன்று ஜம்மு-காஷ்மீர் மாநிலச் சட்டமன்றத்தின்மீது நடைபெற்ற தாக்குதல் மற்றும் *13-12-2001* அன்று இந்திய நாடாளுமன்றத்தின்மீது நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலில் தம் இன்னுயிரை இழந்தவர்களுக்கு இரங்கல் தீர்மானம்.

"*1-10-2001* அன்று ஜம்மு-காஷ்மீர் மாநிலச் சட்டமன்றத்தின் மீதும், *13-12-2001* அன்று இந்திய ஜனநாயகத்தின் உயரிய அமைப்பான இந்திய நாடாளுமன்றத்தின் மீதும் நடத்தப்பட்ட தீவிரவாதிகளின் தாக்குதல்களை அறிந்து இப்பேரவை மிகவும் அதிர்ச்சி அடைகிறது. இத்தகைய தாக்குதல்கள் இந்தியத் திருநாட்டின் மீதும் இந்திய ஜனநாயகத்தின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்களாகவே இப்பேரவை கருதுகிறது. தீவிரவாதம் மற்றும் அதன் வன்முறைச் செயல்களை எந்தச் சூழ்நிலையிலும் இம்மண்ணில் எவராலும் ஏற்றுக்கொள்ள இயலாது. தீவிரவாதத்தின் எந்த ஒரு வடிவமும் அடியோடு வேரறுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை இப்பேரவை உறுதி செய்கிறது. இச்சம்பவங்களின்போது தன்னலங்கருதாது தங்களது கடமையை நிறைவேற்றும் வேளையில் நாட்டின் பாதுகாப்பிற்காகத் தங்கள் இன்னுயிரை நீத்த பாதுகாப்புப் படையினர் மற்றும் ஏனைய அலுவலர்களின் மறைவுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு



2002 மார்ச் 11] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

### (ஆ) திரு. ஜி.எம்.சி. பாலயோகி, மக்களவைத் தலைவர் மற்றும் திரு. ம. அப்துல் லத்தீப், திரு. ஆ. செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.எம்.சி. பாலயோகி, திரு. ம. அப்துல் லத்தீப் மற்றும் திரு. ஆ. செல்வராஜ் ஆகியோர் மறைவு குறித்த இரங்கல் தீர்மானங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜி.எம்.சி. பாலயோகி, மக்களவைத் தலைவர் அவர்கள் மறைவு குறித்து.

"இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் இளம் வயதில் மக்களவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், முழுமையான ஜனநாயகவாதியும், நலிந்த பிரிவினரின் நலனுக்காக அரும்பாடுபட்டவரும், ஜனநாயக, நாடாளுமன்ற மரபுகளை நேர்மையுடன் பாரபட்சமின்றி கடைப்பிடித்தவரும், தனது திறமை, கடும் உழைப்பு, தொலைநோக்கு, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பாங்கு ஆகியவற்றால் அனைத்துத் தரப்பினராலும் கட்சி பாகுபாடின்றி பாராட்டப்பெற்றவரும், எளிமையும், அடக்கமும் தன்னகத்தே கொண்டு *13*-வது மக்களவைத் தலைவராகத் திறம்பட பணியாற்றிய திரு. ஜி.எம்.சி. பாலயோகி அவர்கள் *3-3-2002* அன்று எதிர்பாராத விபத்தின் காரணமாக அகால மரணமடைந்த செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

முற்பகல் *10-10*

திரு. ஜி.எம்.சி. பாலயோகி அவர்கள் வழக்குரைஞராகவும், சமூகத் தொண்டராகவும், விளையாட்டு வீரராகவும், விவசாயப் பெருங்குடி மகனாகவும், தொழிற்சங்கவாதியாகவும் திகழ்ந்தவர். *1991-96* ஆகிய

ஆண்டுகளில் மக்களவை உறுப்பினராகவும், 1996-98 ஆகிய ஆண்டுகளில் ஆந்திர மாநில உயர்கல்வித் துறை அமைச்சராகவும், 1998-99 ஆகிய ஆண்டுகளில் மீண்டும் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 12-வது, 13-வது மக்களவையின் தலைவராகவும் பணியாற்றி உள்ளார்.

அவரது மறைவு இந்திய ஜனநாயகத்திற்கும், தேசத்திற்கும் ஏற்பட்டுள்ள ஈடுசெய்ய இயலாத இழப்பாகும். அவரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த தீர்மானம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ம. அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மறைவு குறித்து:

"1971-76, 1977-80, 1996-2001 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளில் வாணியம்பாடி தொகுதியிலிருந்தும், 1989-91-ல் சேப்பாக்கம் தொகுதியிலிருந்தும் மொத்தம் 5 முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராகப் பணியாற்றியவரும், இப்பேரவையில் நீண்ட நெடிய அரசியல் அனுபவம் வாய்ந்த மூத்த உறுப்பினர்களில் ஒருவரும், சிறந்த வழக்குரைஞரும், இந்திய தேசிய லீக் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளராகவும், தமிழகத் தலைவராக இருந்தவரும், பன்மொழிகளில் வல்லமை பெற்றவர் என அழைக்கப்பட்டவரும், மாணவப் பருவத்திலேயே பொது வாழ்வில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவரும், தான் கொண்ட கொள்கையில் மாறாத பற்றுள்ளவரும், பொது வாழ்க்கையில் நேர்மை, நன்னெறிச் சான்றாண்மை ஆகிய நற்பண்புகளுக்கு எடுத்துக்காட்டாய் திகழ்ந்தவரும், பேரவை அலுவல்களில் பெரும்பங்கேற்று சீரிய முறையில் செயலாற்றியவருமான திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள் 17-12-2001 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. இப்பெருந்தகையின் மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்திற்கும், அவர் சார்ந்திருந்த இயக்கத்திற்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஆ. செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மறைவு குறித்து:

"அச்சரப்பாக்கம் தனித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையில் உறுப்பினராகப் பணியாற்றியவரும், இனிய பண்பும், செயல் ஆற்றலும் கொண்டு அனைத்துத் தரப்பினரிடமும் நட்புணர்வோடு திகழ்ந்தவருமான திரு. ஆ. செல்வராஜ் அவர்கள் 29-01-2002 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடாளுமன்றத்தினுடைய சபாநாயகராக இருந்து, விபத்தின் மூலமாக மரணமடைந்து, இந்திய மக்களையெல்லாம் மீளாத் துயரத்தில் ஆழ்த்திச் சென்ற திரு. பாலயோகி அவர்கள் விவசாயக் குடும்பத்திலே பிறந்து, தன்னுடைய அயராத உழைப்பாலும், நற்பண்புகளாலும், இந்திய மக்களும், இந்திய அரசியல் தலைவர்கள் அத்தனை பேரும் பாராட்டுகின்ற அளவிலே நல்ல முறையிலே பணியாற்றியவர் என்பதாலும், அதோடு, நாடாளுமன்றத்திலே பல்வேறு சந்தர்ப்பங்களிலே எதிர்க்கட்சிகளெல்லாம் புயலாக எழுகின்ற நேரத்திலேகூட, தன்னுடைய இனிய சுபாவத்தால், அவற்றையெல்லாம் இனிய முறையிலே தீர்த்து, நாடாளுமன்றத்தை நல்ல வழியிலே நடத்திச் சென்ற திரு. பாலயோகி அவர்களுடைய மரணத்திற்கு, நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரது குடும்பத்தினருக்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

அதுபோல அருமைச் சகோதரர் அப்துல் லத்தீப் அவர்கள் சிறுபான்மை மக்களினுடைய நம்பிக்கை நட்சத்திரமாக இருந்து அவர்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்களுக்கெல்லாம் இந்தச் சட்டமன்றத்திலே உரிய முறையிலே குரல் கொடுக்கக்கூடிய இனிய

நண்பராக நம்மிடத்திலே இருந்தார்கள். பொதுவாக தனக்கு வேண்டியவர்கள் யாராவது மறைந்துவிட்டால் என்னுடைய வலது கரம் இல்லாத நிலையை நான் உணர்கிறேன் என்று சொல்வது வழக்கம். அதுபோல, என்னைப் பொறுத்த அளவிலே சென்ற முறையும் சரி, இந்த முறையும் சரி, எனக்கு வலது கரமாக, பக்கத்திலே, வலது பக்கத்திலே அமர்ந்து, அரசியல் ஆசானாக, பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொல்கின்ற ஒரு இனிய தலைவராக இருந்தவர். அதுபோல அவர் சில நேரங்களிலே மிகக் கடுமையாக வாதங்கள் புரிகின்ற நேரத்தில்கூட நான் அவர்களிடத்திலே கொஞ்சம் சாந்தமாக இருங்கள் என்று சொல்கின்ற நேரத்திலே அதையும் ஏற்றுக் கொண்டு மரியாதை சேர்த்த பெரியவர். எங்களிடத்திலே நீண்டநாள் நண்பராக, தலைவர் மூக்கையா தேவர் காலத்திலிருந்து எங்களுடைய பகுதிகளுக்கெல்லாம் வந்து, எங்களுடைய முன்னேற்றத்துக்கு உதவியவர். அன்னாருடைய மறைவு சிறுபான்மை மக்களுக்கும், தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து அரசியல் கட்சிகளுக்குமே பேரிழப்பாகும் என்கின்ற முறையில் அன்னாரது மறைவுக்கு அவரது குடும்பத்தாருக்கும், அவரது இயக்கத்தாருக்கும் நான் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல நண்பர் செல்வராஜ் அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினராக குறுகிய காலம் இருந்தாலும் அவர் வாழ்க்கையிலே மிகுந்த பண்போடு வாழ்ந்தவர் என்பதை நான் தெரிந்துகொண்டிருக்கிறேன். எனவே அன்னாருடைய மறைவிற்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு கே.என். இலட்சுமணன்.

***திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, உயர்திரு ஜி.எம்.சி. பாலயோகி அவர்கள் இந்தப் பதின்மூன்றாவது மக்களவைத் தலைவராக மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர். நாடாளுமன்றத் தொடர்களிலேயே இந்தப் பதின்மூன்றாவது மக்களவைத் தொடர் மிக மிகச் சிரமமாக இருந்த காலம். நாள்தோறும் பிரச்சினைகள் எழுந்தபோதிலும், மிகப் பொறுமையாக இருந்து திறம்பட மிகச் சிறந்த மக்களவைத் தலைவர் என்கின்ற பெயரைப் பெற்றவர்கள். மிகச் சிறிய வயதிலேயே விபத்தில் அவர் மரணம் அடைந்ததைப்பற்றி மிக்க துயர் கொள்கின்றோம். அவரது பிரிவால் வாடுகின்ற அவரது குடும்பத்தாருக்கும், அவரைப்





பிரிந்து வாடுகின்ற அவரது கட்சிக்காரர்களுக்கும், கட்சிக்கும் பாரதிய ஜனதா கட்சி சார்பாக மிக்க இரங்கல் தெரிவித்துக்கொண்டு, அவருடைய ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உயர்திரு எம். அப்துல் லத்தீப் அவர்கள் எனக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டு மிகச் சிறப்பாக,—இந்தச் சட்டமன்றத்திலே புதியவன் நான், அரசியல் அனுபவம் பெற்றாலும்கூட சட்டமன்ற அனுபவம் எனக்கு இல்லை.—எப்படியெல்லாம் இங்கே இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அடிக்கடி அவருக்கேயுரிய ஒரு சிறப்பான முறையிலே எடுத்துச் சொல்வார்கள். உண்மையிலேயே மிக நெருக்கமானவர்களா என்று மக்கள் ஆச்சரியமாகப் பார்க்கின்ற அளவிற்கு அவர்கள் பழகியவர்கள். எம்.ஏ.,எம்.எல்., படித்து சிறந்த வழக்கறிஞராக இருந்தவர். ஒருநாள் அவர் மத்தியப்பிரதேசத்திலே முஸ்லீம் லீக் கட்சி சார்பாக பொதுக்கூட்டத்திலே பேசச் சென்றிருந்தபோது, முஸ்லீம் லீக் கட்சியினுடைய தேர்தல் பிரச்சார நேரம் 9 மணிக்கு முடிவுற்றது. அதே இடத்திலே பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் பிரச்சாரத்துக்குப் போயிருக்கின்றார்கள். லத்தீப் அந்த மேடையிலே உட்கார்ந்திருக்கிறார்கள், முஸ்லீம் லீக் மேடையிலே. அடுத்து இருக்கின்ற மேடையிலே வாஜ்பாய் பேசவேண்டும், பி.ஜே.பி. மேடையிலே. அப்துல் லத்தீப் இன்னும் பேசவில்லை என்று கேட்டறிந்தவுடனே வாஜ்பாய் அவர்களே கிட்ட வந்து, லத்தீப் அவர்களே, நீங்கள் பேசி முடித்த பிறகு நான் பேச ஆரம்பிக்கிறேன் என்று சொன்னார். மிகப் பெரிய ஒரு மாமனிதர் என்று அவரே குறிப்பிட்டிருக்கிறார்கள். இளம் வயதிலேயே மனைவியை இழந்தபோதிலும்கூட மறுமணம் செய்துகொள்ளாமல் தன்னுடைய வாழ்நாளில் இந்தச் சமுதாய நல்வாழ்வுக்காகப் பாடுபட்ட உத்தமர் அவர்கள். அவருடைய ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்றும், அவரது பிரிவால் வாடுகின்ற குடும்பத்தாருக்கும், கட்சியினருக்கும் எங்களது மனமார்ந்த அஞ்சலியைச் செலுத்திக்கொள்கின்றேன்.

அதேபோல திரு. ஆர். செல்வராஜ் அவர்களுடைய மறைவு சட்டமன்றத்துக்குப் பேரிழப்பாகும். மிகச் சிறிய எளிமையான குடும்பத்திலே பிறந்தபோதிலும், இந்த உயர்ந்த சமுதாயத்திற்கு உழைக்க வேண்டும் என்று பாடுபட்ட உத்தமர். அவர் ஆன்மா சாந்தி அடைய வேண்டும் என்று வேண்டி, அவரது பிரிவினாலே வாடுகின்ற அவருடைய குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2002 மார்ச் 11

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடாளுமன்றத்தினுடைய சபாநாயகராக இருந்து சிறந்த முறையிலே பணியாற்றிய திரு. ஜி.எம்.சி. பாலயோகி அவர்களுடைய மரணத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து குறைந்த வயதிலே சிறந்த முறையில் அரசியலிலே பணியாற்றி, உயர்ந்த பொறுப்புகளுக்கு தன்னை இட்டுச்சென்றுகொண்ட பாலயோகி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போன்று நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலையிலும்கூட அரசியல் பக்குவத்தோடு அனைத்துக் கட்சிகளையும் அரவணைத்து அவையை நடத்திய அந்த நல்ல பாங்கினைப் பெற்றிருந்தார்கள். அவருடைய அதிர்ச்சிகரமான அந்த இறப்பு என்பது நாட்டையே குலுக்கியது. அவர்களுக்கு இரங்கல் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள் இந்த மன்றத்திலே ஒரு மூத்த உறுப்பினர். நமக்கெல்லாம் பதவிப் பிரமாணம் செய்து வைத்தவர். நல்ல அரசியல் அனுபவத்தோடு, பொறுப்புணர்வோடு இந்த மன்றத்திலே அவர் சீரிய பணியாற்றினார். சபையினுடைய இறையாண்மையைப் பாதுகாக்க வேண்டும் என்று அனைவருக்கும் அடிக்கடி நினைவுபடுத்தி அவருடைய உரையை நிகழ்த்துவார். அதோடு மட்டுமல்லாமல் சிறுபான்மை மக்களுக்கு இந்த மன்றத்திலே குரல் கொடுத்து பல்வேறு உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதிலே உறுதியாக இருந்து, அவர்களுக்குக் குரல் கொடுத்தவர், சிறந்த அரசியல்வாதி. அவரை இந்த மன்றம் இழந்தது பேரிழப்பாகும்.

அதேபோன்று குறைந்த வயதிலே, இந்த மன்றத்திலே பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. செல்வராஜ் அவர்களும் குறைந்த நாளே பணியாற்றி இருக்கிறார்கள். அவரும் இயற்கை எய்தியிருக்கிறார். அவருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.



2002 மார்ச் 11]

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையினுடைய முனைவர் அவர்கள் நாடாளுமன்றத் தலைவராக இருந்த திரு. பாலயோகி அவர்களுடைய பண்பைப் பற்றி இங்கே சில கருத்துகளை எடுத்து வைத்தார்கள். நாடாளுமன்றத்தில் ஒரு முக்கியமான காலகட்டத்திலே பல முக்கியமான பிரச்சினைகள் எல்லாம் அங்கே எழுப்பப்பட்ட பல சூழ்நிலைகளிலே அந்த நாடாளுமன்றத்தை நடத்த வேண்டிய தேவை ஏற்பட்ட நேரத்திலே எல்லாம் ஜனநாயக மரபையும் பாதுகாத்து, மக்களுடைய உரிமைகளையும் பாதுகாத்து, அந்த நாடாளுமன்றத்தைச் சிறந்த முறையில் நடத்திய ஒரு தலைவர் திரு. பாலயோகி அவர்கள் என்பதை நாம் மறக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு சிறந்த மக்களவைத் தலைவரை இந்த நேரத்திலே இழந்திருப்பது என்பது அவர் சார்ந்திருக்கிற தெலுங்கு தேசக் கட்சிக்கு மட்டுமல்ல, இந்த நாட்டிற்கே ஏற்பட்டிருக்கிற ஒரு மிகப் பெரிய இழப்பு என்று நான் கருதுகிறேன். நாடாளுமன்றத்திலே சிறந்த முறையிலே மக்களுடைய அடிப்படையான உரிமைகளை, மக்கள் பிரதிநிதிகளுடைய அடிப்படையான உரிமைகளைப் பாதுகாத்து, எப்படி அவை நடத்தப்பட வேண்டும் என்பதற்கு ஓர் இலக்கணமாகக்கூட அவர் விளங்கினார் என்று நான் சொல்வேன். அப்படிப்பட்ட ஒரு பெரியவரை நாம் இழந்திருக்கிறோம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை அவர் சார்ந்திருக்கிற தெலுங்கு தேசக் கட்சிக்கும், அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அவையில் ஒரு மூத்த உறுப்பினராக இருந்து சிறந்த முறையிலே பணியாற்றிய பெரியவர் அப்துல் லத்தீப் அவர்களுடைய இழப்பு என்பது நமக்கு ஏற்பட்டிருக்கிற ஒரு பெரிய இழப்பு என்று நான் கருதுகிறேன். ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு எந்த நேரத்திலேயும் தவறாமல் போராடிக்கொண்டிருந்த ஒரு நல்ல சட்டமன்ற உறுப்பினரை நாம் இழந்திருக்கிறோம்.

அதேபோன்று சிறுபான்மை மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவர் எந்த நேரத்திலும் தவறியதில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதற்கெல்லாம் மேல் அவர் ஒரு சிறந்த மதச்சார்பற்றவாதி என்ற முறையில் Secularism இந்த நாட்டிலே நிலைநாட்டப்பட வேண்டுமென்பதற்காக, தன்னுடைய குரலைத் தொடர்ந்து எழுப்பிக்கொண்டிருந்த ஒருவர் என்பதும் நாம்

மறக்கமுடியாது. அப்படிப்பட்ட ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினரை நாம் இழந்திருக்கிறோம். அவர் சார்ந்த கட்சியினருக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

சின்ன வயதிலே இந்தச் சட்டமன்றத்திற்கு, பாட்டாளி மக்கள் கட்சியால் நிறுத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவையில் வந்து, சுருங்கிய காலமானாலும், நல்ல முறையில் செயலாற்றிய ஓர் உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்கள். அவருடைய இழப்பு அல்லது அவருடைய மறைவு என்பது ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினராக வளர்ந்து வருவதற்கு வாய்ப்பு இருக்கிற ஒருவருடைய இழப்பு என்று நான் கருதுகிறேன். அவரை இழந்திருக்கிற பாட்டாளி மக்கள் கட்சிக்கும், அவரைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் திரு. ஜி.எம்.சி. பாலயோகி அவர்கள் மறைவு குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய இரங்கலை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த தலைவர் பாலயோகி அவர்களுக்கு மொழி ஒரு பிரதானமாக இல்லை. இந்தி மட்டுமே ஆட்சியிலே இருந்துகொண்டு நாடாளுமன்றத்திலே வழிநடத்திக் கொண்டிருக்கிற நேரத்தில், அந்த மொழியே தெரியாமல் ஆங்கிலத்தையே துணைகொண்டு இந்த நாட்டை நிர்வகித்து வந்தவர் பாலயோகி என்று சொல்கின்றபோது. உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்த ஒரு நல்ல தலைவரை நாம் இழந்திருக்கிறோம். அதேபோல அனைத்துக் கட்சியினரும் பாராட்டக்கூடிய ஒரு மிகச் சிறந்த தலைவராகத் திகழ்ந்தார். குறிப்பாகப் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி அன்னை சோனியா காந்தி அவர்கள்கூட ஒரு நல்ல மாற்றத்தை நாடாளுமன்ற நடவடிக்கைகளிலே ஏற்படுத்த வேண்டுமென்று மிகத் துணிச்சலான காரியங்களில் இறங்கியவர் அவர் என்று பாராட்டக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. சட்டமன்றமும், நாடாளுமன்றமும் எப்படி



நடக்க வேண்டும் என்பதற்காக மிகப்பெரிய ஒரு 'செமினாரையே' அவர்கள் நடத்தினார்கள். தமிழகத்தினுடைய சார்பிலே நம்முடைய அமைச்சர்களும், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும்கூட அதிலே பங்கேற்றிருக்கின்றோம். ஒரு நல்ல ஆரோக்கியமான அரசியலை இந்த நாட்டிலே சட்டமன்றத்தின் மூலமாக, நாடாளுமன்றத்தின் மூலமாக நடத்தி, உலக அரங்கிலே இந்தியத் திருநாட்டினுடைய பெருமையை நிலைநிறுத்த வேண்டுமென்று ஆதங்கம் கொண்டு, அதற்காகப் பணியாற்றிய ஒரு நல்லவர். குறிப்பாக, மிக இளைய வயதிலே மிகப்பெரிய பொறுப்புக்கு வந்தவர். இந்தியத் திருநாட்டினுடைய எதிர்காலத்திற்கு ஒரு மிகப்பெரிய முதல் பொறுப்பாக இருக்கிற ஜனாதிபதி பொறுப்புக்குக்கூட வரக்கூடிய அந்தத் தகுதியும், ஆற்றலும் பெற்ற ஒருவரை, ஆதிதிராவிட சமுதாயத்தில் பிறந்தவரை இந்தியத் திருநாடு இழந்திருக்கிறது என்பதை வேதனையுடன் இந்த நேரத்தில் நினைவில்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். அவரை இழந்து தவிக்கிற அவருடைய துணைவியார் விஜயகுமாரி அவர்களுக்கும், அவருடைய கட்சிக்கும், இந்த மாமன்றத்தின் மூலமாக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய இரங்கலை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

நம்மோடு இந்தச் சட்டமன்றத்திலே இருந்த தலைவர், மறைந்த தலைவர் எம். அப்துல் லத்தீப் அவர்கள் உண்மையிலேயே மிக மரியாதைக்குரிய ஒரு தலைவர். நம்முடைய முதல்வர் அவர்களைச் சொல்லும்போது, தங்கை என்பார், சகோதரி என்பார். எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற கலைஞர் அவர்களைச் சொல்லுகின்றபோது, கடுமையான விமர்சனம் செய்கின்றபோது, அண்ணன்கிட்டப் போய்ச் சொல்லுங்கள், அண்ணன் என்றுதான் சொல்வார். அது சட்டமன்றக் குறிப்புகளிலேகூட இருக்கும். அப்படி தனக்கு வேண்டியவர்களாக இருந்தாலும், தன்னுடைய கருத்திற்கு எதிரானவர்களாக இருந்தாலும், அவர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் கொடுத்து, தன்னுடைய கருத்துகளை எடுத்து வைக்கக்கூடிய ஒரு சிறந்த ஆற்றல் பெற்றவராக அவர் திகழ்ந்தார் என்பதை நாம் மறக்க முடியாது. சட்டமன்றத்திற்கு அவர் ஒரு Dictionary மாதிரி; கோனார் நோட்ஸ் மாதிரி. ரொம்ப நாளாக அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தது மட்டுமல்லாமல், அரசியலிலே ரொம்ப நாள் இருந்ததாலே பல தலைவர்களோடு அவருக்கு நெருக்கமான பழக்கம் இருந்த காரணத்தாலே, பல சம்பவங்கள் புதிய தலைமுறையினருக்குத் தெரியவில்லை என்று

சொல்லும்போது, அவற்றை எடுத்துச்சொல்லக்கூடிய ஒரு மிகச் சிறந்த ஆற்றல் படைத்தவராக இருந்தார். அவரை இழந்தது நம்முடைய தமிழ்நாட்டிற்கு மட்டுமல்லாயல், நிச்சயமாக நம்முடைய பேரவைக்கும் மிகப் பெரிய நஷ்டம் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகின்றேன். அவர் மதச்சார்பற்றவர் என்பது மட்டுமல்லாமல், இந்திய ஒருமைப்பாட்டிலே அழுத்தமான பிடிப்பு உள்ளவராக இருந்தார். அவரிடத்திலே பேசுகின்றபோது அவர் அதைத்தான் சொல்வார். அப்படிப்பட்ட ஒரு நல்லவரை நாம் இந்த நேரத்திலே இழந்திருக்கின்றோம்.

அதேபோல நம்மோடு சட்டமன்ற உறுப்பினராக இருந்து, குறுகிய காலமே நம்மோடு பழகிய சட்டமன்ற உறுப்பினரான திரு. ஆ செல்வராஜ் அவர்கள் மறைந்திருக்கின்றார்கள். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அவர் வந்து இருந்தாலும்கூட, அவர் எல்லோரிடத்திலும் சகஜமாகப் பேசி, சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளிலே தன்னுடைய முழுமையான கவனத்தைச் செலுத்தியதை நாம் மறக்க முடியாது. அவரை இழந்து தவிக்கின்ற அவருடைய குடும்பத்தாருக்கும், அந்தக் கட்சிக்கும் நான் எங்களுடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல நம்முடைய அருமைத் தலைவர் அப்துல் லத்தீப் அவர்களுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் எங்களுடைய இரங்கலை எங்களுடைய கட்சியின் சார்பிலே தெரிவித்து நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜி.எம்.சி. பாலயோகி, திரு. எம். அப்துல் லத்தீப், திரு. ஆ செல்வராஜ் ஆகியோர் மறைவு குறித்து நம்முடைய பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இரங்கல் உணர்வுகளை நான் இங்கே பகிர்ந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நாடாளுமன்றத்தினுடைய மக்களவைத் தலைவராகப் பொறுப்பேற்று பல்வேறு காலகட்டங்களிலே சோதனையான நேரங்களிலே சிறந்த முறையிலே வழிநடத்திச் சென்ற ஒரு நல்ல நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் என்ற பெயரைப் பெற்றவ



அமரர் ஜி.எம்.சி. பாலயோகி அவர்கள். அவரைப்பற்றிச் சொல்கின்ற நேரத்திலே அவர் ஒரு சிறந்த வழக்குரைஞர். இளம் வயதிலே வழக்குரைஞராகப் பணியாற்றியதோடு மாத்திரம் அல்லாமல், அந்த மாநிலத்தினுடைய ஜில்லா பரிஷத் தலைவராகப் பொறுப்பேற்று, கிராம மக்களுடைய நல்ல மதிப்பையும் மரியாதையையும் பெற்றவர். அதற்குப் பிறகு ஆந்திர மாநிலத்தினுடைய கல்வியமைச்சராகப் பொறுப்பேற்ற நேரத்திலே கல்வித் துறைக்கென மிகப்பெரிய பெருமையைச் சேர்த்த பெருமை அவருக்கே உண்டு. அந்த மாநிலத்தினுடைய கல்வித் துறையிலே இதுவரையிலே இல்லாத அளவிற்கு அரிய நற்காரியங்களை எல்லாம் செய்தார் என்ற பெருமைக்குரிய பாராட்டைப் பெற்றவர். அதற்குப் பிறகு நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1998-லே 12-வது மக்களவையிலும், 13-வது மக்களவையிலே 1999-லேயும் மக்களவைத் தலைவராகப் பொறுப்பேற்ற நேரத்திலே, நாடாளுமன்றத்திற்கு எப்படிப்பட்ட சோதனை வந்தது என்று எல்லோருக்கும் தெரியும். அப்படிச் சோதனையான நேரத்திலே ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற நிலையிலே அல்லாமல், நாடாளுமன்றத்திலே இருக்கக்கூடிய மக்களவையிலே இருக்கக்கூடிய, பெரிய கட்சி, சிறிய கட்சி என்ற பாகுபாடு இல்லாமல், எல்லோரும் இந்த நாட்டினுடைய பிரதிநிதிகள் என்ற உணர்வோடு அரவணைத்துச் சென்ற பெருமை அவருக்கு இருக்கிறது. அப்படி கட்சி வித்தியாசம் பார்க்காத ஓர் இளம் தலைவரை, ஒரு நல்ல தலைவராக வளர்ந்துகொண்டிருக்கக்கூடிய இளம் தலைவரை இந்த நாடு இழந்திருக்கின்றது என்ற வேதனையை இங்கே நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்டுகிறேன்.

இப்படி பாகுபாடு இல்லாமல் நடந்து கொண்டார் என்பதற்கு இலக்கணம், அவர் உடல் அடக்கம் செய்யப்படுகின்ற நேரத்திலே, அவருடைய உடலை டெல்லி மாநகரத்திற்குக் கொண்டு வந்தது மாத்திரம் அல்லாமல், அந்த நேரத்திலே மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தியதோடு, அவரது உடல் அடக்கம் செய்யப்படுகின்ற இடத்திற்கு பாரதப் பிரதமர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற சோனியாகாந்தி அவர்களும் மற்ற அமைச்சர்களும், எல்லா எதிர்க்கட்சியினரும் சென்று அஞ்சலி செலுத்தினார்கள் என்று சொன்னால், அவருடைய பண்புக்கு, அடக்கத்திற்கு, அன்பிற்கு, எல்லோரிடத்திலும் சகஜமாக இருந்தார் என்ற ஓர் நிலைக்கு அது இலக்கணமாகும் என்று நான் சுட்டிக்காட்டுகிறேன்.

முற்பகல் 10-35

ஆகவே, இந்த அளவிலே பணியாற்றிய அமரர் பாலயோகி அவர்கள், 1998 ஆம் ஆண்டு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்கள் டெல்லி மாநகரிலே தமிழ் ஆட்சிமொழி ஆக்கப்பட வேண்டுமென்று ஒரு மிகப் பெரிய மாநாட்டை நடத்தியபோது அந்த மாநாட்டிலே கலந்து கொண்டு பேசுகின்ற நேரத்திலே 'தமிழ் மொழியின் மீது எனக்கு மிகுந்த மரியாதை இருக்கிறது, பற்று இருக்கிறது. ஆகவே, தமிழை நான் மெள்ள மெள்ள கற்றுக்கொள்கிறேன்' என்று ஆர்வத்தோடு சொன்னார்கள். ஆகவே, அப்படித் தமிழைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் மிக்கவர் அந்தத் தலைவர். அதைப்போல், 1999 ஆம் ஆண்டு அகில இந்திய சமூகநீதி மாநாடு என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே டாக்டர் ஐயா அவர்கள் டெல்லி மாநகரத்திலே நடத்தினார்கள். அந்த மாநாட்டிலே மிகப் பெரிய கோரிக்கையாக நாங்கள் வைத்தது, இந்த நாட்டிலே மாநில அளவிலேயும், மத்திய அரசுத் துறைகளிலேயும் அரசு வேலைவாய்ப்பு குறைவாக இருக்கின்ற இந்தக் காலகட்டத்திலே தாழ்த்தப்பட்ட சமுதாயங்களைச் சார்ந்தவர்களுககு, பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களைச் சார்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு குறைந்துகொண்டே இருக்கிறது, ஆகவே தனியார் நிறுவனங்களிலேயும் இட ஒதுக்கீடு வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் கோரிக்கைக்கு வலு சேர்க்கக்கூடிய வகையிலே அந்த மாநாட்டைத் தொடங்கி வைத்து 'என்னுடைய பதவிக் காலங்களிலே நாடாளுமன்றத்திலே எப்படியாவது தனியார் நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு கொண்டுவருவதற்கு என்னால் இயன்ற அளவுக்குப் பாடுபடுவேன்' என்ற வாக்குறுதியை அந்த மாநாட்டிலே கொடுத்தார்கள். ஆக, இதைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், இந்த நாட்டிலே தலித் மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும், அவரவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பெற்று சிறப்பாக வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்ட ஒரு நல்ல தலைவராக விளங்கியவர் அவர் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மாத்திரம் அல்ல, இந்திய நாட்டிலே நாடாளுமன்ற மரபுகள், சட்டமன்ற மரபுகள் எல்லாம் மீறப்படுகின்றதாகக் கருதி, அவற்றை நெறிமுறைப்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, நம்முடைய சகோதரி யசோதா அவர்கள் சொன்னதுமாதிரி இந்தியத் திருநாடு உலக அரங்கிலே சிறந்த நாடு என்று எல்லோரும்



பாராட்டக்கூடிய வகையிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் நடந்துகொள்ளும் விதங்களைப்பற்றி, நடைமுறைகளைப்பற்றி, வழிகாட்டக்கூடிய வழிகாட்டி நெறிமுறைகளை உருவாக்கக்கூடிய ஒரு நல்ல மாநாட்டை நடத்தி அந்த மாநாட்டின் வாயிலாக அரிய கருத்துகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இப்படி அவருடைய புகழைப்பற்றி, பெருமைகளைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்னும் நீண்ட நேரம் சொல்லிக்கொண்டே இருக்கலாம்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவரின் கூற்றுக்கு இணங்க, இளவயதிலேயே இந்த அளவுக்கு உயர்ந்த ஒரு தலைவரை நினைவு கூர்ந்து, அவருக்கு நன்றி செலுத்தக்கூடிய வகையில் இந்த நாடு நன்றி செலுத்துகிறது என்று சொன்னால், பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே இந்த மாமன்றத்தின் வாயிலாக என்னுடைய கோரிக்கையாக வைத்துக்கொள்ள விரும்புவது, அவருக்கு மரியாதை செலுத்தக்கூடிய வகையிலே அவருடைய இடத்தை நிறைவு செய்ய, அந்த இடைத் தேர்தலிலே, அகில இந்தியக் கட்சிகள், ஆந்திர மாநிலத்திலே இருக்கிற கட்சிகள் எல்லாம், படித்தவர் என்று பாராட்டக்கூடிய அவருடைய துணைவியார் போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை இந்த நேரத்திலே மாமன்றத்தின் வாயிலாக விடுத்து, அப்படிப்பட்ட உயர்ந்த தலைவருக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தாருக்கும், தெலுங்கு தேசம் கட்சிக்கும், இந்திய நாடாளுமன்றத்திற்கும் மீண்டும் ஒரு முறை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, தமிழ்நாட்டிலே 5 முறை சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மரியாதைக்குரிய அமரர் எம். அப்துல் லத்தீப் அவர்கள். அவர் பன்மொழிப் புலவர். இந்த மாமன்றத்திலே பேசுகின்றபோது ஆங்கிலத்திலும் பேசுவார், தமிழிலும் பேசுவார். வடமொழி சுலோகங்களை எல்லாம் சொல்லுவார். இப்படி பன்மொழிப் புலவர் மாத்திரம் அல்ல, மிகப் பெரிய சட்ட நிபுணரும்

[திரு. ஜி.கே. மணி] [2002 மார்ச் 11

ஆவார். எந்த நேரத்தில் வேண்டுமானாலும் சட்டத்தை மேற்கோள் காட்டி, உதாரணத்தோடு இந்த மாமன்றத்திலே எடுத்து வைப்பார். அவரிடத்திலே நாங்கள் எல்லாம் இள வயதிலே நிறைய பாடம் கற்றுக்கொண்டோம்.

கடந்த காலங்களிலே, இந்த மாமன்றத்திலே கேரள மாநிலத்திலே இருப்பதைப்போல தமிழகத்திலும் இசுலாமியப் பெருமக்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வேண்டுமென்று சொல்லி நான் தொடர்ந்து பேசுவேன். அப்படிப் பேசுகின்றபோதெல்லாம் என்னைச் சுட்டிக்காட்டி இப்படிப்பட்ட இட ஒதுக்கீட்டுக்கு பாட்டாளி மக்கள் கட்சி ஆதரவாக இருக்கிறது என்று எங்களோடு இணைந்து பேசுவார். அதுமாத்திரம் அல்ல, இப்படி இசுலாமியப் பெருமக்களுக்கு, சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பாக இருந்தார் என்று பெருமையோடு சொல்லக்கூடிய அதேநேரத்தில், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், பெரும்பான்மை மக்களுக்கும் அவர் எந்த நேரத்திலும் எதிராக இருந்ததில்லை. நடுநிலையோடு பணியாற்றியவர். ஆகவே, இப்படிப்பட்ட உயர்ந்த உள்ளம் கொண்ட, மிகப்பெரிய பரந்த நோக்கம் கொண்ட ஒரு நல்ல தலைவரை நாம் இழந்திருக்கிறோம்.

முற்பகல் 10-40

அவர் இந்திய தேசிய லீக் கட்சியினுடைய அகில இந்திய பொதுச் செயலாளராகவும், தமிழகக்கிளையினுடைய தலைவராகவும் இருந்தவர். அவர் மிகப் பெரிய பண்புக்குச் சொந்தக்காரர். அவர் இந்த நேரத்திலே நம்மிடையே இல்லையே என்பது நமக்கெல்லாம் ஆழ்ந்த வருத்தத்தையும் வேதனையையும் அளிக்கிறது என்ற வேதனையான செய்தியை சொல்லி அவரை இழந்து வாடும் இந்திய தேசிய லீக் கட்சிக்கும், அவர்களுடைய உறவினர்களுக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. ஆ. செல்வராஜ், சட்டப்பேரவை உறுப்பினர் அவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். பாட்டாளி மக்கள் கட்சியைத் தோற்றுவித்த நேரத்திலேயே, இள வயதிலேயே தன்னை அந்தக் கட்சியிலே இணைத்துக்கொண்டு எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்கள் சொல்கிற மாதிரி தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய கொள்கையைக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே நான் இந்த இயக்கத்திலே முழுமையாக இணைந்து



2002 மார்ச் 11] [திரு. ஜி.கே. மணி]

அதற்காகப் பணியாற்றுகிறேன் என்று சொல்லி அந்தக் கட்சியினுடைய மாவட்டத் தலைவராக இருந்து சிறப்பாகப் பணியாற்றியவர். அவர் வாழ்க்கையைப்பற்றி சொல்ல வேண்டுமென்று சொன்னால், அவர் உணவுக்குக்கூட கஷ்டப்பட்ட நிலை. அப்படி இருந்தவரை பாட்டாளி மக்கள் கட்சி, கடந்த 5 ஆண்டுகாலம் அவருடைய துணைவியாரை ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படச் செய்தது. அவருடைய துணைவியாருடைய ஒத்துழைப்போடு அந்த ஊராட்சிக்கு நல்ல காரியங்களையெல்லாம் சிறப்பாகச் செய்து மக்கள் பணியாற்றியவர்.

சட்டமன்றத் தேர்தல் வந்த நேரத்திலே, வேட்பாளர்களைத் தேர்வு செய்கின்றபோது எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்கள் சொன்னார்கள், குடியிருக்கக்கூடிய வீட்டுக்குக்கூட வீட்டுமனைப் பட்டா இல்லாமல் ஓர் ஏரிக்கரையோரம் புறம்போக்கு நிலத்திலே சாதாரண ஒரு சின்ன குடிசை வீட்டிலே வாழ்ந்த ஒருவரை வேட்பாளராகத் தேர்வு செய்து அந்தத் தேர்தலிலே டாக்டர் அய்யா அவர்களே முழுமையாகச் செலவழித்து அவரைச் சட்டமன்ற உறுப்பினர் ஆக்கினார்கள். அப்படி அதை மனதிலே வைத்துக்கொண்டு பணியாற்றுகின்ற நேரத்திலேகூட, எங்கள் டாக்டர் அய்யா அவர்களிடத்திலும் எங்களிடத்திலும் அதிகமாகச் சொல்வார், "அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய கொள்கையைக் கொண்டு என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து செய்கின்ற மற்ற பணிகளையெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நான் அதிகமாகச் செலவழிப்பேன்" என்று. எங்களுடைய தலைவர் அய்யா அவர்களும் 75 சதவீதத்தையும் அவர்களுக்கே செலவு செய்யுங்கள் என்று சொல்வார்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், அடித்தட்டிலே இருக்கக்கூடிய அந்தத் தலித் மக்கள் எப்படியாவது முன்னேற வேண்டும் அதற்காக உழைக்கிறேன் என்று சொல்லி அடிக்கடி சொல்வார்கள். ஆகவே, அப்படி தலித் சமுதாயத்திலே பிறந்து அந்த மக்களுக்காகப் பாடுபட வேண்டுமென்று தன்னை அர்ப்பணித்துக்கொண்டு முழுமையாகச் செயலாற்றிய அந்த நல்லவரை வாழ்த்துகிறேன்

எங்கள் கட்சியிலேயும் சட்டமன்ற உறுப்பினர் மத்தியிலேயும் எங்கள் கட்சியில் அடிக்கடி சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட்டி மாதம் ஒருமுறை சட்டமன்ற உறுப்பினர்களின் பணிகளை ஆய்வு செய்வது வழக்கம். அந்த ஆய்வுப் பணிகளிலே அவர் நல்ல மதிப்பெண்களைப் பெற்று மாதாமாதம் பாராட்டுப் பெறுவார். தொகுதி அளவிலே

[திரு. ஜி.கே. மணி] [2002 மார்ச் 11

கூட்டத்தைக் கூட்டிப் பாராட்டுகின்ற நேரத்திலே எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்கள் அடிக்கடி அவரைப் பாராட்டுவார்கள். அப்படிப் பாராட்டுப் பெற்ற நல்ல உறுப்பினர் நோய்வாய்ப்பட்டு இராமச்சந்திரா மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டார். அவர் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டார் என்ற செய்தியைக் கேட்ட உடனேயே அந்த அதிர்ச்சியிலேயே எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டு பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டார். இதைச் சொல்வதற்குக் காரணம், அந்த அளவிற்கு அவர் மீது மிகுந்த மரியாதையை வைத்து இருந்தார். பாராட்டுக்குரியவராகவும் அவர் திகழ்ந்தார். ஆகவே, அவருடைய மருத்துவச் செலவு முழுவதையும் எங்களுடைய டாக்டர் அய்யா அவர்கள் ஏற்றுக்கொண்டு கவனித்தார்கள். அவர் இறந்த பிறகு அவருடைய உடலை அடக்கம் செய்வது முதலாக இன்றைய அளவிலே எல்லா செலவுகளையும் டாக்டர் அய்யா அவர்களும் பாட்டாளி மக்கள் கட்சியும் ஏற்றிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. மேலும், அவருக்கு ஐந்து பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். மிகவும் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. குடியிருக்கின்ற குடியிருப்புக்கூட சாதாரண சின்ன வீட்டுமனைப் பட்டா இல்லாத குடியிருப்பு. அந்த வீட்டிற்குப் பதிலாக புதிதாக ஒரு வீடு கட்டிக் கொடுப்பதற்கும். அந்தக் குழந்தைகள் படிப்பதற்கும் எங்களது நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்கள் அந்தக் குடும்பத்தைத் தத்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற அந்தச் செய்தியையும் சொல்கிறேன். அப்படிப்பட்ட, இந்த மக்களுக்குப் பாடுபட வேண்டுமென்று தன்னை அர்ப்பணித்துக்கொண்ட இளம் வயது சட்டமன்ற உறுப்பினர் இந்த நேரத்திலே இல்லையே என்ற ஆதங்கத்தை, வேதனையை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே தெரிவித்து, அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு இந்த மாமன்றத்தின் வாயிலாக ஆழ்ந்த இரங்கலைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய இறையாண்மைக்கும், ஜனநாயகத்திற்கும் சவால் விடுகிற வகையில் நாடாளுமன்ற வளாகம் தாக்குதலுக்கு இலக்காகியது. அதற்கடுத்த பேரதிர்ச்சியாக மக்கள் சபை சபாநாயகரினுடைய மரணம், அகால மரணம் பேரதிர்ச்சிச் செய்தியாக



2002 மார்ச் 11] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

நமக்கு வந்து சேர்ந்தது. ஸ்ரீகண்டி மோகன சந்திர பாலயோகி அவர்களைப் பொறுத்தவரையில், அவர் அரசியலுக்கு வர வேண்டுமென்று ஒருபோதும் கருதியவர் அல்ல. இன்றையதினம் அவருக்குப் பல சிறப்புகள் உண்டு. இந்தியாவினுடைய தாழ்த்தப்பட்ட குடியிலே பிறந்த முதல் சபாநாயகர், மக்கள் சபை சபாநாயகர் பாலயோகி அவர்கள்தான். இளம் வயதிலேயே சபாநாயகராக இருந்த பெருமையும் அவருக்குத்தான் கிடைத்தது. அதுமட்டுமல்ல, இதுவரையில் எந்த மாநிலங்களைச் சேர்ந்த கட்சியினுடைய ஒரு வேட்பாளரும் சபாநாயகராக டெல்லியிலே தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை. ஒரு பிராந்தியக் கட்சியைச் சேர்ந்தவர், அதிலேயும் அவருக்கு முதன்மை இடம் கிடைக்கிறது. அவ்வளவு சிறப்புகளைப் பெற்ற பாலயோகியினுடைய வாழ்க்கை என்று எடுத்துக்கொண்டால் அவர் சாதாரண, எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய உடன்பிறப்புகள் நிறைய பேர். 7 பேர், அவருடன் பிறந்தவர்கள். கிழக்கு கோதாவரி மாவட்டத்திலே எதுருலங்கா என்ற ஊரிலே அவர் பிறந்தார். பிறந்து அவர் வளர்கிற நேரத்திலே அவருடைய கனவு எல்லாம் சிறந்த வழக்குரைஞராக வர வேண்டும். சிறந்த நீதிமானாகத் திகழ வேண்டும். நீதி பரிபாலனத்திலே உயர்ந்த இடத்திற்கு வர வேண்டும், உயர்ந்த அந்தஸ்துக்கு வரவேண்டும் என்பதுதான் அவருடைய இலட்சியக் கனவாக இருந்தது.

முற்பகல் 10-45

அதேபோல, அவர் படிப்பிலே தேர்ந்து விளங்கினார். அவரோடு பயின்ற பலபேர் இன்று அரசியலிலே இருந்தாலும்கூட, அவர்கள் அரசியலுக்குப் போக வேண்டும் அல்லது கல்லூரிப் பேரவைத் தேர்தலுக்கு நிற்க வேண்டும் என்று சொன்னாலும்கூட, அவர் அதை ஏற்றுக்கொண்டதில்லை. அவர் நமக்கெல்லாம் எதற்கு அரசியல், கல்லூரிப் பேரவைத் தேர்தலுக்கு ஏன் நிற்க வேண்டும் என்று கேட்பாராம். அந்த அளவிற்கு அரசியலையே வெறுத்தவர் அவர். அப்படி வழக்குரைஞராக அவர் தன்னுடைய தொழிலைத் தொடங்கி, நல்ல முறையிலே வழக்குரைஞராக பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில், அவர் விரும்பியபடியே காக்கிநாடாவிலே 1982 ஆம் ஆண்டு ஜூனியர் சிவில் நீதிபதியாக அவர் நியமிக்கப்பட்டார். நியமிக்கப்பட்ட அதே காலகட்டத்திலேதான், ஆந்திராவிலே தெலுங்கு தேசம் கட்சி உதயமானது. தெலுங்கு தேச[illegible] தலைவர் என்.டி. ராமாராவ் அவர்கள் ஒ[illegible]ரு மாவட்டத்திலேயும் யாருக்கு



223445
சென்னை-600 008

மக்கள் மத்தியிலே செல்வாக்கு இருக்கிறதோ, அவர்களையெல்லாம் பிடித்து தன்னுடைய கட்சியிலே சேர்த்துக் கொண்டிருந்த நேரம் அது. அந்தக் காலகட்டத்திலே அவரோடு பயின்ற அவருடைய உற்ற நண்பர் இராமகிருஷ்ணா அவர்கள் என்.டி.ஆர். அவர்களிடத்திலே கிழக்கு கோதாவரி மாவட்டத்தில், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள், தலித் மக்கள் மத்தியிலே திரு. பாலயோகி அவர்களுக்கு அபரிமிதமான செல்வாக்கு இருக்கிறது என்றும், அவரைப் பிடித்து இழுத்துப் போடுங்கள், நிச்சயம் பயனுள்ளவராக விளங்குவார் என்றும் என்.டி.ஆர். இடத்தில் பரிந்துரை செய்தார்கள். என்.டி.ஆர். அவர்களும் அவர் விரும்பியதைப்போல தன்னுடைய கட்சிக்கு அவரை ஈர்த்தார். ஆக, 6 மாத காலம்கூட நீதிபதியாக அவர் செயல்படமுடியவில்லை. கட்சியிலே பல பொறுப்புகளை என்.டி.ஆர். அவர்கள் கொடுத்தார்கள்.

காக்கிநாடாவில் இருக்கிற ஒரு கூட்டுறவு வங்கியினுடைய துணைத் தலைவராக அவர் சில காலம் பணியாற்றி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு 1987-லிருந்து 1991 வரை கிழக்கு கோதாவரி மாவட்டத்தினுடைய மாவட்ட பரீஷத் தலைவராக அவர்கள் பணியாற்றி இருக்கிறார்கள். அந்தக் காலகட்டத்திலே எல்லாம் அவர் மக்கள் மத்தியிலே நிறைய செல்வாக்கு பெற்றவராக விளங்கினார். கூட்டுறவு வங்கி துணைத் தலைவராக இருந்தபோது, சமுதாயத்தினுடைய நலிந்த பிரிவினருக்கு, குறிப்பாக தலித் மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கடன்களை வாரி வழங்கினார்கள். அதுமட்டுமல்ல, அவர்களுக்காக பல நல்ல திட்டங்களைத் தீட்டினார்கள். அந்தப் பணி தொடர்ந்தது. மாவட்ட பரீஷத்தினுடைய தலைவராக அவர்கள் இருந்த நேரத்தில் அந்தப் பணி அவருக்குத் தொடர்ந்தது. அதனுடைய தொடர்ச்சியாகத்தான் 1991 ஆம் ஆண்டு அமலாபுரம் தொகுதியிலே இருந்து மக்கள் சபைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்கள் சபையிலே அந்தக் காலக்கட்டத்திலே, அந்த 5 ஆண்டு காலம் யாருடைய கவனத்தையும் பெரிதாக ஈர்த்தார் என்று சொல்ல முடியாது. ஆனால் 1996-லிருந்து 1998 வரை இரண்டாண்டு காலம் அவருடைய சேவையையும் அவருடைய திறமையையும் அங்கீகரித்து சந்திரபாபு நாயுடு அவர்கள் அவரை உயர் கல்விக்கு அமைச்சராக மாற்றினார்கள். உயர் கல்வி அமைச்சராக அவர் நிறைய நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார் என்று இங்கே தீர்மானத்தை முன்மொழிந்த நேரத்தில், அவை முன்னவர் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள்.





பிறகு 1998-லே நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவர் நாடாளுமன்றத்திற்குச் செல்ல வேண்டும், அங்கே பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வமே இல்லாமல் இருந்தார். நீங்கள்தான் சபாநாயகர் என்று சொன்னபோது, அவருக்கு அதிலே கொஞ்சம்கூட விருப்பம் இல்லை. ஏனென்றால், சபாநாயகர் பதவி தன்னுடைய கட்சிக்கு வருமா என்பதே அவர்களுக்கு அந்த நோத்தில் தெரியாது. ஏனென்றால் ஒரு காலகட்டத்திலே காங்கிரஸ் கட்சிக்கு அந்தப் பதவி ஒதுக்கப்பட்டு, பூர்ணோ சங்மா அவர்கள் வேட்பாளர் என்றுகூட அறிவித்துவிட்டார்கள். எனவே, அன்று முன்தினம் மாலை அவர்கள் டெல்லிக்குச் செல்லவில்லை. மறுநாள் காலை அவர்களைக் கட்டாயப்படுத்தி, நிர்பந்தப்படுத்தி, சந்திரபாபு நாயுடு அவர்கள், நீங்கள் டெல்லிக்குப் போக வேண்டும், நீங்கள்தான் சபாநாயகர், நம்முடைய கட்சிக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னபோது, அந்தப் பதவி எனக்கு வேண்டாம், எர்றான் நாயுடுக்கு கொடுத்து விடுங்கள் என்றுதான் அவர்கள் சொன்னார்கள். தெலுங்கு தேசம் கட்சியினுடைய, முதலமைச்சருடைய அன்புத் தொல்லையின் காரணமாக டெல்லிக்குச் சென்று, சினிமா காட்சியிலே வருகின்ற மாதிரி, கடைசி நிமிடத்திலே, சில நிமிடங்கள் இருக்கும்போதுதான் அவர் வேட்பாளராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். சபாநாயகராக முதலிலே வந்தபோது, இந்தச் சபையை அவர் எப்படிச் சமாளிக்கப் போகிறார்; பல முன்னாள் பிரதமர்கள், முன்னாள் முதலமைச்சர்கள், முன்னாள் ஆளுநர்கள், ஜாம்பவான்கள் எல்லாம் வீற்றிருக்கிற அவையாயிற்றே; இந்த அவையை அவர் எப்படி நடத்தப் போகிறார் என்று பலருக்கும் அவர் மீது நம்பிக்கை இருக்கவில்லை. ஆனால் அந்தப் பதவியை ஏற்ற சில காலத்திற்கெல்லாம் அனைவருடைய அன்பையும் அவர் பெற்றார். அவையிலுள்ள அனைத்துத் தரப்பினருடைய நம்பிக்கைக்கும் உரியவராக அவர் விளங்கினார்.

அதுமட்டுமல்ல, இங்கே எனக்கு முன்னாலே பேசிய நண்பர், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவர் அங்கே பல நல்ல காரியங்களைச் செய்தார். அனைத்துக் கட்சிகளையும் ஒன்றாக ஓரணியிலே திரட்டியது மட்டுமல்லாமல் அவர் சென்ற ஆண்டு ஒரு மாநாடு நடத்தினாரே, அது உள்ளபடியே ஒரு நல்ல செயல் வழிகாட்டும் நெறிமுறைகளை ஏற்படுத்துவதற்காக அங்கே இருக்கின் கட்சித் தலைவர்கள் மட்டுமல்ல, அனைத்துச் சட்டப் பேரவைகளிலே இருக்கின்ற கட்சித் தலைவர்கள், பேரவைத் தலைவர்கள் மற்று

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 மார்ச் 11

கொறடாக்கள் என்று எல்லோரையும் அழைத்து அங்கே மாநாடு நடத்தினார். அதிலே வழிகாட்டும் நெறிமுறைகள் என்று அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்த வழிகாட்டும் நெறிமுறைகளில் பல பின்பற்றப்படாமல் இருந்தாலும்கூட, அந்தப் பெருமை நிச்சயமாக பாலயோகி அவர்களையே சாரும். அப்படிப்பட்ட பாலயோகி அவர்கள் இன்றைய தினம் நம்மிடத்தில் இல்லை. அவர் மிக இளம் வயதிலேயே நம்மைவிட்டு பிரிந்துவிட்டார். உள்ளபடியே அவருடைய குடும்பத்தாரை மட்டுமல்லாமல், அவர் சார்ந்திருக்கிற கட்சியினரை மட்டுமல்லாமல், அனைவரையுமே மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றிருக்கிறார்.

*முற்பகல் 10-50*

விதி வலியது என்று சொல்வார்கள். அவர் மறுநாள் காலையிலே, 3-ஆம் தேதி காலையிலே இருந்திருக்க வேண்டிய இடம் டெல்லி. மார்ச் 2-ஆம் தேதி மாலையில் அவர் தணுகுவிலே ஒரு நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு அங்கிருந்து காக்கிநாடா எக்ஸ்பிரஸில் புறப்பட்டுச் செல்வதாக இருந்தது. செல்லவில்லை. கவுதமி எக்ஸ்பிரஸிலும் செல்லவில்லை. அடுத்த எக்ஸ்பிரஸையும் விட்டுவிட்டார். காரணம் அவருடைய பால்ய நண்பர் எஸ்.ஏ. பால் என்பவர், அமெரிக்காவில் இருக்கிறவர். அவர் சமூக ஊழியராக இருக்கிறார். அவர் நடத்துகின்ற ஒரு விழாவிற்கு அமெரிக்காவிலுள்ள ஆர்கன்ஸாஸ் மாகாண ஆளுநரை அவர் அழைத்து வந்திருந்தார். கண்டிப்பாக நீ பார்த்து விட்டுச் செல்ல வேண்டுமென்று அவரிடத்திலே வலியுறுத்திச் சொன்னபோது, அவரால் தட்ட முடியவில்லை. ஆனால் அவர் சொன்னார். நான் இரவு சென்றேன் என்றால் என்னுடைய குடும்பத்தாரைச் சந்தித்துவிட்டுச் செல்ல முடியும். இப்படிச் செய்கிறாயே என்று கேட்டபோது, இல்லை, இல்லை, நாளை காலை உங்களை ஹெலிகாப்டரில் அனுப்பி வைக்கிறேன்; நான் எனக்காக ஒரு ஹெலிகாப்டரை வாடகைக்கு அமர்த்தி இருக்கிறேன்; அந்த ஹெலிகாப்டரிலே உங்களை நான் அனுப்பி வைக்கிறேன்; நீங்கள் டெல்லிக்குச் சென்று விடலாம் என்று சொன்னார். அப்போது இந்த வார்த்தைகளைத்தான் அவர் கடைசியாகச் சொன்னார். இரவு இரயிலிலே போனால் நான் காலையிலே வீட்டுக்குப் போய் குடும்பத்தாரைச் சந்தித்துவிட்டு டெல்லிக்குச் செல்ல முடியும்; ஆனால் இரவிலே செல்லாமல் காலையிலே நான் ஹெலிகாப்டரிலே போனால் நேரடியாக விமான நிலையத்திலிருந்து குடும்பத்தாரை பார்க்க முடியாமல் போக வேண்டிய நிலைமை வந்துவிடும் என்று



2002 மார்ச் 11] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

சொன்னார்கள். அவர் சொன்னது முழுக்க முழுக்க உண்மையாக, குடும்பத்தாரைப் பார்க்க முடியாமல், அந்த விபத்தின் காரணமாக அவருடைய உயிர் ஹெலிகாப்டரிலேயே பிரிய நேரிட்டது. அவர் நல்லவர். அனைத்துத் தரப்பினருடைய பாராட்டுதல்களுக்கும், போற்றுதல்களுக்கும் உரியவராக விளங்கினார் சபாநாயகர் பாலயோகி. தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் அவருடைய மரணத்தினால் அவரை இழந்து வாடும், அவர் சார்ந்திருக்கிற தெலுங்கு தேசம் கட்சியினருக்கும், அவருடைய உற்றார், உறவினர், குடும்பத்தார் அத்தனை பேருக்கும் இரங்கலை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, நம்முடைய அருமை நண்பர் லத்தீப் அவர்கள், அவரைப்பற்றி எல்லோரும் சொன்னார்கள். லத்தீப் அவர்களை கல்லூரி நாட்களிலிருந்தே நான் அறிவேன். வயதிலே என்னைவிட கொஞ்சம் மூத்தவர் என்றாலுங்கூட எனக்கு ஒரு வருடம் ஜூனியர். பச்சையப்பன் கல்லூரியிலும் ஜூனியர், சட்டக் கல்லூரியிலும் ஜூனியராக இருந்தார்கள். ஜூனியராக இருந்தாலும் அதிக உரிமையோடு என்னிடத்திலே பழகுவார். எப்போதும் அரசியலிலே எங்களுக்குள்ளே நிறைய கருத்து வேறுபாடுகள் உண்டு. இரண்டு பேரும் ஒத்துப்போன காலகட்டங்கள் என்பது மிகவும் குறைவு; ஒரே அணியிலே இருந்த காலகட்டம் என்பது குறைவு. பெரும்பாலும் எதிரணியிலேதான் இருப்போம். சட்டப்பேரவையிலேகூட வாதங்களை எடுத்துப் பார்த்தால் எங்கள் இரண்டு பேருக்கும் ஒத்துப்போன காலகட்டம் என்பது மிகவும் குறைவாகத்தான் இருக்கும். எதிர்த்துத்தான் பேசிக் கொள்வோம். ஆனால் உரிமையோடு இரண்டு பேரும், 'நீ', 'போ', வா' என்று பேசிக்கொள்கிற அளவுக்கு, ஒருமையிலே பேசிக்கொள்கிற அளவுக்கு எங்களுக்குள்ளே உரிமை பாத்தியதை உண்டு. அந்த அளவுக்கு எனக்கு மிக வேண்டியவர் அவர். அவர் இறப்பதற்கு 36 மணி நேரத்திற்கு முன்னர் 15-ஆம் தேதி, டிசம்பர் 15-ஆம் தேதி மாலை சைதாப்பேட்டையிலே நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்திலே முன்னாள் பாரதப் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் கலந்துகொண்ட கூட்டத்திலே நானும் அவரும் கலந்துகொண்டோம். அன்றுதான் நான் அவரை கடைசியாகப் பார்த்தது. கொஞ்சம் களைப்பாக இருந்தார்கள். அது ரம்ஜான் மாதம் என்கிற காரணத்தினாலே, ரம்ஜான் நோன்பு இருக்கிற காரணத்தினாலே அந்தக் களைப்பு என்று நினைத்தேன். நான் அவரிடத்திலேயே கேட்டேன். சற்றுக் களைப்பாக இருப்பதாகத் தெரிகிறீர்கள் என்று கேட்டேன். இல்லை, இந்த மாதத்தில் ரம்ஜான் நோன்பு இருக்கிறேன், வேறு

ஒன்றும் இல்லை, நான் நன்றாக இருக்கிறேன் என்று சொன்னார்கள், மறுநாள் மாலையிலே எனக்கு ஒரு செய்தி வந்தது. ஹாஸ்ப்பிடலிலே அட்மிட் ஆகியிருக்கிறார் என்ற செய்தி வந்தது. நண்பர் ஒருவர் என்னிடத்திலே சொன்னார்கள். சரி, காலையிலே போகலாம், நானும் வருகிறேன், இரண்டு பேரும் போகலாம் என்று சொல்லியிருந்தேன். மறுநாள் காலையிலே யாரும் எதிர்பாரா வகையில் ரம்ஜான் மாதத்தினுடைய இறுதிநாளில் அடியார்க்கு அடியனாக, தேவனின் அடியார்க்கு அடியனாக இறைவன் அவரை அழைத்துக் கொண்டார் என்ற செய்தி பேரிடியாக வீழ்ந்தது.

*முற்பகல் 10-55*

அவரைப் பொறுத்தவரையில் இந்தச் சபைக்கு 5 முறை அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். 1971, 1977, 1989, 1996, 2001 என்று 5 முறைகள் இந்தச் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார். அனைத்து விவாதங்களிலும் அவர் கலந்துகொள்வார். அனைத்துப் பிரச்சினைகளிலும் அவர் பேசுவார். அவருக்குத் தெரியாத விஷயமே இல்லை. எதையும் ஆழமாக ஊன்றிப் படிக்கக் கூடியவர். சுருக்கமாகச் சொன்னால் பன்மொழிப் புலவர். அவருக்கு தமிழ், ஆங்கிலம் மற்றும் வடமொழிகள் தெரியும். வடமொழிகளில் அற்புதமான ஸ்லோகங்களைச் சொல்வார். வடமொழி கற்றவர்கள் எல்லாம் எந்த அளவுக்குச் ஸ்லோகங்களைச் சொல்வார்களோ அந்த அளவுக்கு, அதைவிட அற்புதமாகச் ஸ்லோகங்கள் சொல்வார்கள். எந்த இடத்திலேயிருந்தும், இராமாயணத்திலேயிருந்து, மகாபாரதத்திலே இருந்து எந்த நேரத்திலும் மேற்கோள்கள் காட்டி பேசக்கூடிய அற்புதமான ஒரு பேச்சாளராகவும், ஸ்லோகங்களைச் சொல்லக்கூடிய ஒருவராகவும் அவர் விளங்கினார். அதேபோல உருதுவிலேயும், இந்தியிலேயும் பாண்டித்தியம் பெற்றவராகவும் இருந்தார். பன்மொழிப் புலவர். அவர் இந்தச் சபையிலே ஆற்றிய அவருடைய பங்கு என்பது சாதாரணமானதல்ல. அவர் இருந்த காலகட்டங்களிலே எல்லா விவாதங்களிலும் கலந்துகொண்டு அவர் பேசியிருக்கிறார். அவர் இன்றையதினம் நம்மிடத்திலே இல்லை. அவர் இந்திய தேசிய லீக் கட்சியினுடைய அகில இந்திய பொதுச் செயலாளராகவும் தமிழ்நாடு கிளையினுடைய தலைவராகவும் இங்கே பணியாற்றிக்கொண்டு இருந்தார். அவரை இழந்து தவிக்கின்ற இந்திய தேசிய லீக் கட்சிக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினருக்கும், தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் என்னுடைய இரங்கலை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





அதேபோல நண்பர், நம்மோடு இங்கே பணியாற்றிக்கொண்டிருந்த செல்வராஜ் அவர்கள் இன்றையதினம் நம்மிடத்திலே இல்லை. பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினராக இங்கே பணியாற்றிக்கொண்டிருந்தார். அவர் பாட்டாளி மக்கள் கட்சியிலே உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தாலுங்கூட, அத்தனை பேரோடும் மிகவும் சகஜமாகப் பழகக்கூடியவர். மிக எளிமையானவர். அவரைப்பற்றி மணி அவர்கள் சொன்னார்கள். நூற்றுக்கு நூறு உண்மை. மிக, மிக, மிக எளிமையான, ஏழ்மையான குடும்பத்திலே அவர் பிறந்தார். அதே மாதிரிதான் கடைசி வரைக்கும் அவர் வாழ்ந்து கொண்டு இருந்தார்கள். ஒரு சாதாரணமான எளிய வீட்டிலே அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களையெல்லாம் கேட்டால் அவரைப்பற்றி அற்புதமாகச் சொல்கிறார்கள். அதேபோல வாழ்ந்துகொண்டு இருந்தார். கடைசி வரையிலே ஒரு சின்ன குடிசையிலே வாழ்ந்துகொண்டு இருந்தார். அப்படிப்பட்ட ஒருவரை, உண்மையான ஒரு பாட்டாளியை பாட்டாளி மக்கள் கட்சி இந்தப் பேரவைக்கு அனுப்பி வைத்தது. அதற்காக நாம் பாட்டாளி மக்கள் கட்சிக்கும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்களுக்கும் பாராட்டுச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். அவரை இழந்து தவிக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சிக்கும், செல்வராஜ் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாள் பல்வேறு இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டிய ஒரு நாளாக அமைந்துவிட்டது. குறிப்பாக, இந்திய ஜனநாயகத்தினுடைய பாதுகாப்புக்கூடமாக இருக்கிற நாடாளுமன்றத்திற்கேகூட ஒரு கடுமையான ஆபத்து ஏற்படக்கூடிய அளவிற்கு வன்முறையாளர்களுடைய தாக்குதல் திட்டமிட்டு நடைபெற்று நல்ல வேளையாக இன்னும் சொல்லப்போனால், நல்வாய்ப்பாக அங்கே இருந்த பாதுகாவலர்கள், வீரர்கள் தங்கள் உயிரை அர்ப்பணம் செய்து நாடாளுமன்றத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதற்கு முன்னர் காஷ்மீர் சட்டமன்றமும் அதுபோன்ற தாக்குதலுக்கு ஆளாயிற்று. அவற்றில் உயிரிழந்தவர்களுக்கெல்லாம் இன்றைக்கு நாம் நம்முடைய வீர வணக்கத்தை, இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு இருக்கிறோம்.

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 மார்ச் 11

நாடாளுமன்றத்தினுடைய உயர்ந்த பெருமையின் சின்னமாக விளங்கியவர். இந்தக் காலகட்டத்தில் நாடாளுமன்றத்தினுடைய தலைவராக விளங்கியவர் ஜி.எம்.சி. பாலயோகி அவர்கள் ஆவார். நாடாளுமன்றம் ஆண்டுக்காண்டு அதிக பிரச்சினைகளைச் சந்திக்கின்ற ஒரு பீடமாக மாறி வருகிறது. நீண்டகாலமாகவே நாடாளுமன்றத்திலே பிரச்சினைகள் வருகிறபோது, பல்வேறு கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் மிக அதிக அளவிற்கு உரிமை எடுத்துக்கொண்டு வாதாடுகிற ஒரு நிலை அனுமதிக்கப்பட்டு வந்தாலுங்கூட, அண்மைக் காலமாக நாடாளுமன்றம் அடிக்கடி கொந்தளிப்பிற்கு ஆளாகக்கூடிய ஒரு நிலையை நாம் கண்டு வருகிறோம். இந்த நிலையில் வடபுலத்தைச் சாராத, தென்புலத்தைச் சார்ந்தவரும் இந்தி மொழியிலே அதிகம் பயிற்சி இல்லாதவரும் ஒரு மாநில கட்சியினுடைய தலைவராக இருக்கக்கூடியவருமான பாலயோகி அவர்கள், நாடாளுமன்றத்தினுடைய தலைவராகப் பொறுப்பேற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டபோது, அவரேகூட மிகவும் தயங்கி, மறுத்து அவருடைய கட்சித் தலைவருடைய வேண்டுகோளை ஏற்று அந்தப் பொறுப்பிலே அமர்ந்தார்கள். அப்படி அமர்ந்த பாலயோகி அவர்கள், தன்னுடைய மதிநுட்பம் காரணமாக பிரச்சினைகளையும், அந்தப் பிரச்சினைகளை எழுப்புகிறவர்களையும் புரிந்துகொள்கிற அந்த உணர்வு காரணமாக, நடுநிலை நோக்கு காரணமாக, ஜனநாயகத்தை மதிக்கின்ற உணர்வு அடிப்படையில், அனைத்துக் கட்சியினரையும் சமமாக மதிக்கின்ற அந்தப் போக்கினால் நாடாளுமன்றத்திலே எழுந்த பல்வேறு பிரச்சினைகளிலே ஏற்பட்ட மிகக் கடுமையான வாதங்களிலேகூட, ஆர்ப்பாட்டங்களிலேகூட, அந்த அவையினை கொந்தளிக்கிற கடலில் கவிழ்ந்துவிடாமல் கப்பலைக் கொண்டு செல்வதைப்போல, செலுத்துவதைப்போல, பாலயோகி அவர்கள் லோக் சபா என்று அழைக்கப்படுகிற மக்களவையினுடைய சிறப்பு குன்றாமல், குந்தகம் ஏற்படாமல், சபாநாயகர்மீது யாரும் பழி சொல்ல முடியாமல், மிகவும் பாதுகாப்பாக அந்தச் சபையை நடத்தி வந்தார்கள்.

*முற்பகல் 11-00*

ஏற்கெனவே நான் அங்கே உறுப்பினராக இருந்த காலத்தில், ஆந்திராவைச் சேர்ந்த சஞ்சீவ ரெட்டி அவர்கள் அந்தச் சபையினுடைய தலைவராக இருந்து, பல பிரச்சினைகளைச் சந்தித்தார்கள். சபையை மிகச் சிறப்பாக அந்தக் காலத்திலே வழி நடத்தினார்கள். அவர்கள் நமது மாநிலம் சென்னை மாகாணமாக



2002 மார்ச் 11] [பேராசிரியர் க. அன்பழகன்]

இருந்த காலத்திலே, இந்த மாகாணத்தினுடைய அமைச்சராகவும் இருந்தவர்கள், ஆந்திராவினுடைய முதலமைச்சராகவும் இருந்தவர்கள். அவர்கள் அளவு நீண்ட அனுபவத்தைப்பெறுகிற வாய்ப்பு இல்லாவிட்டாலுங்கூட, பாலயோகி அவர்கள், தன்னுடைய பெருந்தன்மை காரணமாக, அந்தச் சபையை நடத்தியதில் அனைவருடைய பாராட்டையும் பெற்றார்கள்.

ஆந்திராவிலே ஒரு சாதாரண கிராமத்திலே பிறந்து, கிராமப் பள்ளியிலே படித்து, பின்னர் நகரப் பள்ளிக்குச் சென்று, அதற்குப் பின்னர் கல்லூரிக்குச் சென்று—விவசாயக் குடும்பம், தாழ்த்தப்பட்ட சமூகம் என்ற இரண்டு வகையிலேயும், பின்தங்கிய ஒரு சூழ்நிலையிலேயிருந்து—தன்னுடைய அறிவாற்றல் காரணமாக, நாணயம் காரணமாக, நேர்மை காரணமாக மற்றவர்களின் நம்பிக்கையைப் பெற்றதன் காரணமாக, பலருடைய பாராட்டையும் பெற்றவராகி, ஒரு கட்சியினாலேயே அழைக்கப்பட்டு, அந்தக் கட்சியிலே சேர்ந்து, வளர்ந்து, அந்தக் கட்சியினுடைய தலைவருடைய நம்பிக்கைக்குரியவராக உயர்ந்து, நாடாளுமன்றத்தை வழி நடத்துகிற, அகில இந்தியப் பெருமையைப் பெற்று, நாமெல்லாம் வருந்தக்கூடிய அளவில் எதிர்பாராத ஒரு விபத்திற்கு ஆளாகி அவர் பலியிடப்பட்டு விட்டார். இந்திய நாடு முழுவதும் வருந்துவதற்குரிய நிகழ்ச்சியாக இது அமைந்துவிட்டது. நாடாளுமன்றத்திற்கு மிகப் பெரிய அதிர்ச்சியும் வேதனையும் தரக்கூடிய நிகழ்ச்சி இது. நாமும் மிகப் பெரிய அளவிற்கு அந்தத் துயரத்திலே பங்கு கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக பாலயோகி ஆந்திராவைச் சேர்ந்தவர் என்று சொன்னாலும்கூட, தமிழ்நாட்டுடன் மிக நெருக்கமான உறவு கொண்டவராக, தொடர்புடையவராக, தமிழை மதிப்பவராக, தமிழ்நாட்டையும் தன்னுடைய மாநிலம்போல எண்ணுகிறவராக இங்கே உறவு உடையவராக விளங்கியவர்கள். அவருடைய மறைவு ஒரு பேரிழப்பு என்ற முறையில், முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து, என்னுடைய ஆழ்ந்த இரங்கலை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், இந்த அவையிலே வீற்றிருக்கிற கழக உறுப்பினர்கள் சார்பாகவும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல பல ஆண்டுகளாக நான் அறிந்து, நல்லமுறையிலே பழகி, நட்பாடியதுடன் இந்தச் சட்டமன்றத்திலே 1971 ஆம்

ஆண்டிலேயிருந்து பலமுறை இங்கே வீற்றிருந்து பணியாற்றுவதைப் பார்த்து, மிக நல்ல திறமையான ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்று நாங்கள் மதித்து வந்த திரு. அப்துல் லத்தீப் அவர்கள் கடந்த இரண்டு, மூன்று திங்களுக்கு முன்னர் மறைய நேரிட்டது நமக்கு ஒரு பெரிய இழப்பு. அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை வழி நடத்திய அந்தக் காலக்கட்டத்திலேயே கண்ணியம்மிக்க காயிதே மில்லத் சாகிப் அவர்களோடு ஏற்பட்ட நட்பு காரணமாக, அவர்கள் இருவரும் சந்திக்கிற காலத்திலே, கண்ணியம்மிக்க காயிதே மில்லத் அவர்களோடு வருகிற அவருடைய சீடர்கள் 2, 3 பேர்களில் ஒருவராக அப்துல் லத்தீப் இருந்தார்கள். அண்ணாவினிடத்திலே, அதேபோல தலைவர் கலைஞர் இடத்திலே, எங்களிடத்திலேயெல்லாம் மிக அன்போடு பழகியவர், மிகச் சிறப்பான முறையிலே கருத்துகளை எடுத்து வைப்பவர். கொள்கைப் பிடிப்புடையவர். ஓர் இயக்கத்தை வழி நடத்திச் செல்கிற அளவிற்கு அந்த இயக்கத்திற்கு, அந்தக் கட்சிக்கான கொள்கையை வகுக்கக்கூடியவர். பன்மொழிப் புலவராக நாமெல்லாம் அறிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு, பேசிக்கொண்டு வருகிறபோதே, வேறு மொழிகள் மூலமாக, தமிழில் பேசுகிறபோது ஆங்கிலம், ஆங்கிலத்தில் பேசுகிறபோது தமிழ், சமஸ்கிருதம், உருது என்று பல மொழிகளில் அவர் பெற்றிருந்த ஆற்றல் காரணமாக, கருத்துகளைத் தெளிவுபடுத்துவதற்கான வாய்ப்பாக அந்த மொழிகளைப் பயன்படுத்தி, இந்த அவையிலே உள்ள அனைவரையும்கூட வியக்கச் செய்திருப்பவர் அப்துல் லத்தீப் அவர்கள்.

முற்பகல் 11-05

கொள்கை மாறுபாடு, கருத்து வேறுபாடு என்பது இயல்பானது என்பதை உணர்ந்தவர். அதுதான் ஜனநாயகம் என்பதை அறிந்தவர். எனவே, உடன்பாடாக இருக்கிறபோது பழகுகிற நிலைமைக்கும், கருத்து மாறுபாடு வருகிறபோது பழகுகிற நிலைமைக்கும்கூட அதிக வேறுபாடு இல்லாத அளவுக்கு அனைவரிடமும் மதிப்பு காட்டி, அன்பு காட்டி பழகக்கூடியவர். திராவிட முன்னேற்றக் கழகத்தோடு அவர் தோழமைக் கட்சியாக இருந்து இந்த அவையிலே செயல்பட்டு இருக்கிறார்கள். மாறுபட்டவராக இருந்தும் செயல்பட்டு இருக்கிறார்கள். இரண்டு நிலையிலேயும் இந்த அவையிலே என்னைப் போன்றவர்களிடத்திலே அன்பு காட்டுவதிலே, மதிப்பு காட்டுவதிலே எந்த வேறுபாடும் இல்லாமல், ஒரேமாதிரியாக நடந்து கொள்ளக்கூடிய ஒரு பண்பாட்டை





நான் அவரிடத்திலே பார்த்திருக்கிறேன். ஒரு நல்ல நண்பர். ஒரு கட்சியினுடைய இன்றியமையாத வழிகாட்டியாக விளங்கியவர். சிறுபான்மைச் சமூகத்திற்கு பாதுகாப்பு தேடுவதிலே என்றைக்கும் அயராது பாடுபட்டவர். மேலும் அவர் ஐக்கிய சிறுபான்மையினர் பேரவைக்குப் பொதுச் செயலாளராகவும் இருந்தார்கள். எனவே, அவருடைய இழப்பு அவருடைய குடும்பத்திற்கும் பேரிழப்பு; அவர்களுடைய இயக்கத்திற்கும் பேரிழப்பு; இந்தச் சட்டமன்றத்திற்கும் பேரிழப்பு. எனவே, அவரை இழந்து துயருற்ற அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் அச்சரப்பாக்கம் தொகுதியினுடைய பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவையிலே இடம்பெற்ற நம்முடைய அன்பிற்குரிய ஆ. செல்வராஜ் அவர்கள், இந்தச் சட்டமன்றத்திலே தன்னுடைய கடமையை ஆற்றுவதிலே மிகுந்த ஆர்வத்தோடு இருந்தவர்கள். பாட்டாளி மக்கள் கட்சித் தலைவருடைய அக்கட்சி உறுப்பினர்களுடைய முழு நம்பிக்கையைப் பெற்றவர். அவர் எதிர்பாராத வகையிலே உடல்நலக் குறைவிற்கு ஆளாகி, அதிலிருந்து மீளாமல், மறைய நேரிட்டுவிட்டது. அது ஒரு பெரிய இழப்பு. அந்தச் சமுதாயத்திற்கும் இழப்பு; பாட்டாளி மக்கள் கட்சிக்கும் இழப்பு; சட்டமன்றத்திற்கும் இழப்பு என்ற முறையில் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை செல்வராஜ் அவர்களுடைய குடும்பத்தாருக்கு, மனைவி மக்களுக்கு, அதேபோல பாட்டாளி மக்கள் கட்சித் தலைவருக்கு, அக்கட்சி உறுப்பினர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இரங்கல் தீர்மானங்களை முன்னவர் மொழிந்த தீர்மானங்களை நான் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக வழிமொழிகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடாளுமன்றத்தின் 12-ஆவது மக்களவை மற்றும் 13-ஆவது மக்களவை சபாநாயகராகப் பணியாற்றிய மாண்புமிகு திரு. ஜி.எம்.சி. பாலயோகி அவர்கள், எதிர்பாராதவிதமாக ஹெலிகாப்டர் விபத்தில் மறைவெய்தியது ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். அவர் தலித் சமுதாயத்தில் பிறந்து, இந்திய நாட்டின் மிக உயர்ந்த பதவிகளில் ஒன்றான மக்களவைத் தலைவர் பதவியை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 மார்ச் 11

அலங்கரித்தார். நாடாளுமன்ற நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதில் அவர் காட்டிய ஆர்வமும், பொறுமையும் அளவிட முடியாதவையாகும்.

மக்களவை உறுப்பினராக இருந்து பணியாற்றிய காலத்தில் அவர் பெற்ற அனுபவமும், ஆந்திர மாநிலத்தில் கல்வி அமைச்சராக அவர் பணியாற்றிய காலத்தில் பெற்ற அனுபவமும்தான் மக்களவைத் தலைவராக இருந்து சிறந்த முறையில் அவையினை நடத்திச் செல்ல வழிவகுத்தது எனலாம். நாடாளுமன்றத்தில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு இக்கட்டான பிரச்சினைகள் தலைதூக்கியபோதெல்லாம், சமயோசிதமாக சூழ்நிலைகளைக் கையாண்டு அவையை அமைதியுடன் நடத்துவதற்கு பெருமுயற்சிகளை மேற்கொண்டவர் திரு. பாலயோகி அவர்கள். இந்தவகையில், அவரது பணி அனைத்துக் கட்சியினரும் பாராட்டும் வகையில் அமைந்திருந்தது. மதி நுட்பம் மிகுந்த மக்கள் சேவகராகவும், தெய்வ பக்தி மிகுந்தவராகவும், ஏழையெளிய மக்களின் உயர்வுக்காகப் பாடுபட்டவராகவும், பொறுமையின் இருப்பிடமாகவும் மாண்புமிகு திரு. ஜி.எம்.சி. பாலயோகி அவர்கள் விளங்கினார். மக்களவையின் நேரம் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவும், அவையில் அமளியின்றி விவாதங்கள் ஆரோக்கியமாக நிகழ வேண்டும் என்பதற்காகவும், மாண்புமிகு திரு. பாலயோகி அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் நன்கு பயன்தரத் தொடங்கிய வேளையில் அவரது மறைவு இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கே பேரிழப்பாக அமைந்துவிட்டது.

முற்பகல்: 11-10

தமிழக சட்டமன்றப் பேரவையின் மூத்த உறுப்பினராக இருந்த அன்புச் சகோதரர் மாண்புமிகு திரு. அப்துல் லத்தீப் அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து விட்டார். அவரது இழப்பு எந்த வகையிலும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். இந்திய தேசிய லீக் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளராகவும், தமிழ்நாடு பிரிவின் தலைவராகவும் இருந்து, வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவையில் பணியாற்றிய மாண்புமிகு திரு. அப்துல் லத்தீப் அவர்கள், தமிழ், ஆங்கிலம், உருது உட்பட பல மொழிகளில் வித்தகராக விளங்கினார். தமிழகத்தில் மத வேறுபாடுகள் அகலவேண்டும். சாதிபேதமற்ற சமுதாயம் உருவாக வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு, தன் வாழ்நாள் முழுவதும் பாடுப்பட்டு வந்தவர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள். தான்



2002 மார்ச் 11] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கடைப்பிடித்து வந்த இஸ்லாம் சமய நெறியின்மீது மிகுந்த பற்றுள்ளவராகத் திகழ்ந்த போதிலும், அவர் மற்ற சமயங்களின்மீது மிகுந்த மதிப்பு கொண்டிருந்தார். சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்கள் முன்னேற வேண்டும் என்பதற்காகப் பெரிதும் பாடுபட்டு வந்த மாண்புமிகு திரு. அப்துல் லத்தீப் அவர்கள் வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி சார்பாக நான்கு முறையும், சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி சார்பாக ஒரு முறையும் இப்பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த அவையின் Pro-tem Speaker-ஆகப் பங்காற்றிய திரு. அப்துல் லத்தீப் அவர்கள் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியோருடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். அவரது மறைவு தமிழகப் பொது வாழ்விற்கு ஈடுசெய்ய இயலாத ஒரு இழப்பாகும்.

அச்சரப்பாக்கம் தனித் தொகுதியிலிருந்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. செல்வராஜ் அவர்களின் மறைவு நம்மையெல்லாம் ஆழ்ந்த வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது. இளம்வயதில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொகுதி மக்களுக்காக அரும்பணியாற்றிய அவர், இந்த அவையில் சிறிது காலமே பணியாற்றியிருந்தாலும், அந்தத் தொகுதி மக்களின் பேரன்பிற்குரியவராகத் திகழ்ந்திருக்கிறார். அவரின் அகால மரணம் மிகவும் துரதிருஷ்டவசமானது.

மக்களவை சபாநாயகர் மாண்புமிகு திரு. பாலயோகி அவர்கள், அன்புச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்கள், ஆகியோரின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் இந்தச் சட்டமன்றப் பேரவையில் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களும், பேரவையின் அனைத்துக் கட்சித் தலைவர்களும் தெரிவித்திருக்கிற இரங்கலோடு என்னுடைய இரங்கலையும் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறைந்த இந்தப் பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (*12-3-2002*) காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர் பேரவை முற்பகல் 11-14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

223445